INDIAN JOURNAL OF TAMIL | Volume 2 | Issue 1

இந்திய தமிழ் ஆய்விதழ்

Check for updates

RESEARCH ARTICLE

# திருமந்திரம் கூறும் திருமூலரின் இறைநெறிக் கொள்கைகள்

**வே. சுலோச்சனா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, கம்பன் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவண்ணாமலை-606603, தமிழ்நாடு, இந்தியா.

# Thirumoolar's Theosophical Principles in Tirumantiram

**V. Sulochana** [a, *]

[a] Department of Tamil, Kamban College of Arts and Science for Women, Tiruvannamalai-625532, Tamil Nadu, India.
*Corresponding Author Email: pandusulo@gamil.com
(Received: 11th January 2020; Accepted: 19th Febuary 2021)
DOI: http://doi.org/10.34256/ijot2116

**Abstract:** We should worship The Lord, the great object of knowledge that removes the darkness of the world, in our hearts to remove the darkness of our ignorance. The purpose of this article is to take the principles of the gods in thirumoolar that the salvation of human life is to be rewarded with the realization of the truth in the hearts of each of us by understanding the truth of the truth.

**Key Words:** Thirumoolar, Tirumantiram, Bhakti literature, Worship, Principles in Tirumantiram

## முன்னுரை

பன்னிரு திருமுறைகளில் ஒன்றான திருமந்திரம் பத்தாம் திருமுறையாகும். இந்நூலில் ஆசையைத் துறந்தவர்களின் உள்ளத்தில் உள்ளிருந்துக் கொண்டு அவர்களை இயக்கி அவர்களுக்கு முக்தி தந்தருளுகிறார். இறைவன் என்ற உண்மையினை உணர்த்தும். திருமூலர் தனது திருமந்திரத்தில் இறைவனை அடையும் வீடுபேறுகளாக திருமூலர் கூறும் இறைநெறிக் கொள்கைகளை எடுத்தியம்புவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும் (Manickam, 2001).

## இறைத் தத்துவம்

மனதில் எழும் பந்த பாசப் பற்றுகளே மாயை ஆகும். இந்த மாயையாவது அறிவை, மனதை மயக்கும் இயல்புடையது. மாயை அழிந்துவிட்டால் போதும் துன்பம் ஏதுமில்லை. எனவே முதலில் ஒவ்வொருவரும் தன்னை அறிவதே இறைத் தத்துவம் என்பதை உணர வேண்டும் என்பதை,

“மனமாயை மாயை இம்மாயை மயக்க

மனமாயை தாய்மாய மற்றொன்றும் இல்லை” (திருமந்திரம், ப.160)

என்று திருமூலர் தனது திருமந்திரத்தில் கூறியுள்ளார் (Manickam, 2001).

## திருமூலரின் இறைக்கொள்கை

ஆலயங்களில் மட்டுமே இறைவன் இருப்பதாக எண்ணிக்கொண்டிருந்த காலத்தில் மக்கள் கண்மூடித்தனமான சம்பிரதாயங்களால் தம் பொன்னையும், பொருளையும், காலத்தையும் விரயம் செய்து வந்தபோது சித்தர்களில் ஒருவரான திருமூலர் இறைவன் இருக்கும் இடத்தை மக்களுக்கு உணர்த்த எண்ணி, உடம்பில் உயிரில் ஆறு ஆதாரங்களில் பொருந்தியுள்ள பரம்பொருளை அறியும் எண்ணம் யாருக்கும் இல்லை. எனவே சிவசிந்தனையோடு இருப்பவர் மனத்துள் மாணிக்க மாலையாக இறைவன் அருள்புரிவான் என்பதை,

"மாணிக்க மாலை மனம் புகுந்தானே" (திருமந்திரம், பா.1843-4)

என்று திருமந்திரத்தில் கூறியுள்ளார்.

## இறைவன் உறைவிடம்

இறைவன் நம் உள்ளத்திலும் வெளியிலும் பரந்து உள்ளான் என்று நம்பினால் இரண்டு இடங்களிலும் அவர் இருப்பதை உணரலாம். உள்ளம் இறைவனுறையும் ஆலயம் என்பதை,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்

வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்

தெள்ளத் தெளிவார்க்கு சீவன் சிவலிங்கம்

கள்ளப் புலன் ஐந்தும் காளாமணி விளக்கே" (திருமந்திரம், ப.1823)

என்ற இப்பாடல் உள்ளமும் மனமும் கோயிலின் கருவறை, ஊனுடம்பு ஆலயம், ஆருயிர்களுக்கு அருளை வாரி வழங்கும் கோபுர வாய், உடலில் பொருந்தியுள்ள ஐந்து புலன்களும் கோவிலின் ஐந்து பெரிய அழகிய மணி விளக்குகள் போன்று விளங்குகின்றது. அறிவு விளக்கமுற்று அறியாமை இருளகன்று, தெள்ளத் தெளிவான மனநிலை வாய்க்கப் பெற்றவர்கள் உயிரே வழிபட்டு வணங்கத் தக்க சிவலிங்கம் என்கிறார் மெய்ப்பொருள் அறிவு பெற்ற திருமூலர். மேலும் இதயக்குகையில் இயங்கும் இறைவன் எவரை விரும்புகிறானோ அவருக்கே தன்னை வெளிப்படுத்திக் காட்டுகிறான். இறைவனை உணர்ந்து அனுபவிக்க வேண்டுமானால் நம்முள் இயங்கும் இறைவனையே பிரார்த்திக்க வேண்டும் (Sivayogi Sivarajan, 2015). அவனருளை நாட வேண்டும். அவன் அருள் துணைக்கொண்டே அவனை உணர்ந்து இன்புற முடியும் என்பதை,

"அகம் புகுந்தான் அடியேற்கு அருளாயே

அகம் புகுறந்தும் தெரியான அருள் இல்லோர்க்கு" (திருமந்திரம், ப.1773)

என எடுத்துரைக்கின்றார்.

## இறைவன் ஒருவனே

சித்தர்களின் கொள்கை இறைவன் ஒருவன் என்பதேயாகும். இவ் இறைக்கொள்கையைத் திருமூலர் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கின்றார். மனித குலம் முழுமையும் ஒன்று தான். இறைவனும் ஒருவன் தான். எப்போதும் எவர்க்கும் நல்லதே நினையுங்கால் நல்லதையே செய்யுங்கள். இப்படி வாழ்பவர்களுக்கு இறப்பில்லை. அப்படிப்பட்டவர்கள் இறவாப் புகழுடன் வாழ்வர். எனவே மனத்துள்ளே இறைவனை நினைத்து அவனருளுணர்வோடு பொருந்தி இறைவனை தடுமாற்றம் இன்றி, திருவடி வணங்கி நற்கதி அடையுங்கள். முடிந்த அளவுக்கு அல்லது இயன்றவரை இறைவனை தியானிப்பதிலேயே நேரத்தை செலவிட்டு உண்மையையே

பேசுங்கள். இறைவன் எங்கும் நிறைந்த பேரருளாளன் என்பதை,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

நன்றே நினையின் நமன் இல்லை நாணாமே

சென்றே புகும்கதி இல்லை நும் சித்தத்து

நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்மினோ" (திருமந்திரம், பா.2104)

என்ற அடிகள் மூலம் திருமூலர் மேற்குறிப்பிட்ட இறைக்கொள்கையை எடுத்துக்காட்டுகிறார்.

## இறைவன் சோதி வடிவானவன்

மனமலராகிய தாமரையிலே ஒளிச்சுடராய் விளங்கும் பரம்பொருளை சிந்தையில் வைத்துத் தூய மனத்துடன் தியானித்தால் பிறவித் துன்பமெல்லாம் போய்விடும் என்பதை 'சிந்தையில் வைத்து தெளிவுறச் சேர்ந்திட்டார்' (திருமந்திரம், ப. 2622:2) எனக் கூறியுள்ளார். எல்லாம் வல்ல இறைவனை சோதியாக வணங்குவது ஆதாரமான இயல்பு சித்தர்களும் இறைவனை சோதிவடிவில் வணங்கி மகிழ்ந்து போற்றிப் புகழ்ந்துள்ளனர். இறைவனே சோதி வடிவில் உள்ளான் என்பதற்கு சித்தர் பாடல்கள் சான்று பகர்கின்றன (Somasundaram Somu, 2004). திருமூலரும் சிவனாகிய இறைவனே சோதி வடிவில் உள்ளான் என்பதை,

"சோதித் தனிச்சுடராய் நின்ற தேவன்" (திருமந்திரம், பா.610)

என்று தெளிவாக விளக்குகிறார். மேலும் சிவன் ஒப்பற்ற ஒளி வடிவில் இருளை நீக்குபவன் என்பதை,

"சோதித் தனிச்சுடரேற்ற தயங்கிருள் நீங்க" (திருமந்திரம், பா.1960)

என்ற பாடலில் கூறியுள்ளார். மேலும் இறைவன் எங்கும் நிறைவாயிருந்து ஒளிவீசும் குறைவற்ற சோதி மணிச்சுடரே: பிரகாசமானவனே, தெவிட்டாத தேனே, தேடிப்பெறுதற்கரிய அமுதமே சிவலோக நாதனே என்றும் சூரிய சந்திரரிலிருந்து உண்டாக்கப்படுகிற தீவரையில் எல்லாமே ஒளிரும் தன்மை கொண்டவை, என்றாலும் அவை எளிதில் மாறக்கூடியவையாகும். மெய்ப்பொருளான சிவமோ மாசு மறுவின்றி பிரகாசிப்பதுமான நிரந்தரமான ஒளி என்பதை,

"மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே

தேசனே தேனாரமுதே சிவபுரனே" (திருவாசகம், சிவபுராணம், பக்.22)

என்ற பாடலின் மூலம் மாணிக்கவாசகரும் வலியுறுத்தியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது (Sathu Su. Srinivas, 2016).

## அன்பே கடவுள்

திருமூலரின் சமயம்- இறைக்கொள்கை அன்பே ஆகும். இறைவன் அன்பு வடிவானவன். அவனை அடைய அன்பு வழியில் நடக்க வேண்டும் அன்பு வடிவில் இருக்க வேண்டும் என்கிறார் திருமூலர். திருமந்திரத்தில் பல இடங்களில் அன்பு, அருள், கருணை, அறம் எனப் பல இடங்களில் வலியுறுத்தி உலகம் இயங்க இவையே அடிப்படைக் காரணமாகும். அனைத்தையும் கடந்த இறைவன் அன்பு வடிவானவன். இறைவன் வேறு எதுவாகவும் இல்லை. அன்பாகவே இருக்கிறார் என்பதை,

"அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவலார்

அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்

அன்பே சிவமாவது யாரும் அறிந்தலின்

அன்ப சிவமாவது அமர்ந்திருள் தாரே" (திருமந்திரம், பா.270)

என்று எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுவதே இறைவனுக்கு செய்யும் பூசனை என்கிறார் திருமூலர். அன்பு இல்லையேல் இறைவனை அடைய முடியாது என்பதை பாம்பாட்டிச் சித்தரும்,

"எள்ளளவும் அன்பகத்தில் இல்லாதார் முக்தி

எய்துவது தொல்லுலகில் இல்லை" (பாம்பாட்டிச்சித்திர், பா.4270)

என்ற வரிகள் மூலம் விளக்குகிறார். ஆதிகபவானாகிய இறைவனை அன்பாய் நினைக்கும் போது நாமும் அவரோடு சோதி மயமாக ஆகுவோம் என்ற பொருளை இடைக்காட்டுச்சித்தரும்,

"ஆதி பகவனையே

அன்பாய் நினைப்பாயேல்

சோதி பரகதி தான்

செந்தமது ஆகாதோ?" (இடைக்காட்டுச் சித்தர், பா.64)

என்ற பாடலில் கேள்வி மூலம் எடுத்துரைக்கின்றார். இவ்வாறு சித்தர்கள், இறைவனாக இருப்பது அன்பும் அறிவுமே ஆகும் என்று கூறுகின்றனர். தன்னையறிதல் மூலம் இறைவனாகிய மெய்ப்பொருளை அறிவதே அறிவின் பெருமையும் வீடுபேற்றிறன் பயனுமாகும் என்ற உண்மையை பல்வேறு சித்தர்கள் கூறியுள்ளனர்.

## அறிவே தெய்வம்

இறைவனாகிய மெய்ப்பொருளை அறிவதே அறிவின் பெருமையும் வீடுபேற்றின் பயனுமாகும். இறைவன் அறிவு வடிவானவர் என்பதை,

அறிவு வடிவென் றறியாத என்னை

அறிவு வடிவென்று அருள் செய்தான் நந்தி

அறிவு வடிவென்று அருளால் அறிந்தே

அறிவு வடிவென்று அறிந்திருந் தேனே" (திருமந்திரம், பா.2317)

என்ற பாடலால் திருமூலர் எடுத்துரைக்கின்றார். செய்த நல் வினையின் பயனால் மனிதனாகப் பிறந்து தெய்வம் என்று அறிந்து அந்த அறிவாகிய தெய்வத்தை வழிபட்டு ஞான மார்க்கத்தை அடைவர், மாறாக ஆருயிர் என்பது அறிவு வடிவானது என்று அறியாது மயங்கிக் கிடந்த மானிடரை மயக்கம் உணருமாறு அருளிச் செய்தவன இறைவன் ஆன்மா அறிவு வடிவானது அதற்கு அழிவில்லை என்பதை,

"அறிவுக்கு அழிவில்லை ஆக்கமும் இல்லை

அறிவுக்கு அறிவல்லது ஆதாரம் இல்லை

அறிவே அறிவை அறிகின்றது என்றிட்டு

அறைகின்ற மறை ஈறுகளட தாமே" (திருமந்திரம், பா.2358)

என்ற பாடலின் மூலம் எடுத்துரைத்து ஆருயிர் அழிவதில்லை. உடம்புதான் அழிகின்றது. ஆகவே அறிவு வடிவான ஆருளாளர்க்கு அழிவில்லை, ஆக்கமும் இல்லை என்ற கொள்கையை திருமூலர் வலியுறுத்துகின்றார்.

## முடிவுரை

திருமூலர் காட்டும் இறைமை அன்பே சிவம்; அறிவே தெய்வம் என்பதாகும். உலகின் இருளை நீக்கும் பேரறிவுப் பொருளாக விளங்கும் இறைவனை நமது அறியாமை இருள் நீங்க உள்ளத்தில் வைத்து வழிபட வேண்டும். இறைவன் எல்லா உயிர்களிலும் உறைவதால் உயிர்களுக்கு செய்யும் தொண்டே இறைவனுக்கு செய்யும் தொண்டு என்பதை அகத்தில் உணர்ந்து அன்பால் மெய்ப்பொருளை அறிந்து நம் ஒவ்வொருவர் உள்ளத்தில் நிறைந்திருக்கும் பரம்பொருளைப் போற்றி வீடுபேறு அடைவதே இம்மனித வாழ்வின் முக்தியாகும் என்று திருமூலர் தம் திருமந்திரத்தில் எடுத்துரைத்துள்ள இறைநெறிக்கொள்கைகளை நாமும் பின்பற்றி இறைவனின் திருவருளைப் பெறுவோம்.

## References

Manickam, A., (2001) Thirumanthiram, Moolamum Thelivuraiyum, Vardhaman Publication, Chennai, Sixth Edition.

Sathu Su. Srinivas, (2016) Thiruvasagam, Sree Indhu Publications, Channai, India.

Sivayogi Sivarajan, Ke., (2015) Thirumoolar's Sovereignty, Alagu Pathippagam, Chennai, India.

Somasundaram Somu, M.P., (2004) SittharIlakiyam, Annamalai University, India

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License